## மெட்ரோ ரயில் முதல் கட்ட விரிவாக்க திட்டம்

# சென்னை வந்தடைந்த 3 மெட்ரோ ரயில்களுக்கான பெட்டிகள்

சென்னை,டிச.5: வண்ணாரப்பேட்டை-திருவொற்றியூர் விம்கோ நகர் வரையிலான மெட்ரோ ரயில் முதல் கட்ட விரிவாக்கத் திட்டத்துக்காக, ஆந்திர மாநிலம் ஸ்ரீசிட்டியில் அல்ஸ்தம் தொழிற்சாலையில் தயாரிக்கப்பட்ட மூன்று மெட்ரோ ரயில்களுக்கான பெட்டிகள் சென்னை மெட்ரோ ரயில் பணிமனைக்கு வந்தடைந்தன.

மீதமுள்ள 7 ரயில்களுக்கான பெட்டிகளை தயாரித்து, 2020-ஆம் ஆண்டு பிப்ரவரி இறுதிக்குள் வழங்கப்படும் என எதிர்பார்ப்பதாக மெட்ரோ ரயில் நிர்வாகம் தெரிவித்துள்ளது.

சென்னை வண்ணாரப்பேட்டை முதல் விமான நிலையம் வரை முதல் வழித்தடத்திலும், சென்ட்ரல் முதல் பரங்கிமலை வரை இரண்டாவது வழித்தடத்திலும் மொத்தம் 45 கி.மீ. தூரத்துக்கு மெட்ரோ ரயில்கள் இயக்கப்படுகின்றன. இந்த இரு வழித்தடங்களில் ஓடும் மெட்ரோ ரயில்களில் தினசரி சராசரியாக 95 ஆயிரம் பேர் பயணம் செய்கின்றனர்.



சென்னை மெட்ரோ ரயில் பணிமனைக்கு வியாழக்கிழமை வந்தடைந்த , ஆந்திர மாநிலம் ஸ்ரீசிட்டியில் அல்ஸ்தம் தொழிற்சாலையில் தயாரிக்கப்பட்ட மூன்று மெட்ரோ ரயில்களுக்கான பெட்டிகள்.

இதற்கிடையில், முதல் கட்ட மெட்ரோ ரயில் திட்டத்தில் வண்ணாரப்பேட்டை- விம்கோ நகர் வரை 9.051 கி.மீ. தொலைவுக்கான விரிவாக்கத் திட்டத்துக்காக கட்டுமானப் பணிகள் 2016-ஆம் ஆண்டு தொடங்கின. இந்தப் பணிகள் 2020-ஆம் ஆண்டு ஜூனில் முடிவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்த பணிகள் முடிந்து,மெட்ரோ ரயில் சேவை தொடங்கவுள்ளது.

இதற்கிடையில், இந்த தடத்தில் ரயில்களை இயக்குவதற்காக, ரயில்களைத் தயாரித்து வழங்க பிரான்ஸ் நிறுவனமான அல்ஸ்தம் நிறுவனத்துடன் 2018-ஆம் ஆண்டு மார்ச்சில் ஒப்பந்தம் செய்யப்பட்டது. இந்த ஒப்பந்தப்படி, 10 ரயில்களை தயாரித்து வழங்க முடிவு செய்யப்பட்டது.

ரயில்களை தயாரிக்க ஜப்பான் நிறுவனத்தின் கடனுதவியுடன் ரூ.200 கோடி செலவிடப்படுகிறது. அல்ஸ்தம் நிறுவனம் இந்தியாவில் ஆந்திர மாநிலம் ஸ்ரீசிட்டியில் உள்ள தனது தொழிற்சாலையில் மெட்ரோ ரயிலுக்கான பெட்டிகளை நிகழாண்டில் பிப்ரவரியில் தயாரிக்க தொடங்கியது. இதைத் தொடர்ந்து, ஒரு ரயிலுக்கு தேவையான பெட்டிகள் தயாரிக்கப்பட்டு, பல்வேறு சோதனைகளுக்கு உட்படுத்தப்பட்டன. சோதனை முடிந்து, முதல் ரயிலுக்கான சில பெட்டிகள், சென்னை மெட்ரோ ரயில் நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டன. இந்நிலையில், ஸ்ரீசிட்டியில் உள்ள அல்ஸ்தம் தொழிற்சாலையில் தயாரிக்கப்பட்ட மூன்று மெட்ரோ ரயில்களுக்கான பெட்டிகள் வியாழக்கிழமை சென்னை மெட்ரோ ரயில் பணிமனைக்கு வந்தடைந்தன.

இது குறித்து சென்னை மெட்ரோ ரயில் நிறுவன அதிகாரிகள் கூறியது: மெட்ரோ ரயில் முதல் வழித்தடத்தில் விரிவாக்கத் திட்டத்துக்காக 10 ரயில்களை கொள்முதல் செய்ய ஒப்பந்தம் செய்யப்பட்டது.

விமானநிலையம் முதல் வண்ணாரப்பேட்டை வரை முதல் வழித்தடத்தின் விரிவாக்கத் திட்டத்தில் (வண்ணாரப்பேட்டை-விம்கோ நகர் வரை வழித்தடத்தில்) இந்த ரயில்களை இயக்க திட்டமிடப்பட்டுள்ளது. மூன்று ரயில்களுக்கான பெட்டிகளைத் தயாரித்து எங்களிடம் ஒப்படைத்து உள்ளனர். மூன்று ரயில்களுக்கான பெட்டிகள் சென்னை கோயம்பேட்டில் உள்ள மெட்ரோ ரயில் பணிமனைக்கு வந்தடைந்துள்ளன.

இங்கு வழக்கமான பல்வேறு சோதனைகள் நடைபெறும். பயணிகள் சேவைக்கு அனுப்புவதற்கு முன்னதாக எல்லா சோதனைகளும் முடிந்து தயாராகிவிடும். மீதமுள்ள 7 ரயில்கள் தயாரிக்கும் பணிகள், பல்வேறு நிலைகளில் உள்ளன. இந்த ரயில்களைத் தயாரித்து 2020-ஆம் ஆண்டு பிப்ரவரி இறுதியில் அனுப்பி வைப்பார்கள் என்று எதிர்பார்க்கிறோம் என்றனர்.